**கவனிக்க**.- *2011.03.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1697- 2011 මාර්තු මස 11 වැනි සිකුරාදා - 2011.03.11**

*1697 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II - சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 26 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, மாச்சு மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## ஜயரத்ன நிறுவகத்தினை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

அருந்திக்க பெர்ணாந்துஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''ஜயரத்ன நிறுவகத்தினை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவகத்தினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) சிறுவர், முதியோர், இளைஞர் அமையங்கள் அமைத்தல், உறுப்பினர்களுக்கு வீட்டுக்கடன் வழங்கல், வீடு, காணி வழங்கும் திட்டங்களை ஆரம்பித்தல், நீர் இணைப்பு வழங்கல், சுகாதார வசதிகள் மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ;

(2) மத, சமூக இணக்கப்பாட்டை வலுப்படுத்துமுகமாக திட்டங்களை உருவாக்கல் மற்றும் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அவர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளல் ;

பிறவும்.

அருந்திக்க பெர்ணாந்து,
பாராளுமன்ற உறுப்பினர்,
புத்தளம் மாவட்டம்.

3- 257

---

## அசோக செல்லஹேவா புலமைப் பரிசு மன்றத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

பாராளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கும்புர ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''அசோக்க செல்லஹேவா புலமைப் பரிசு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்'' என்பதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமூலத்தை பாராளு மன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

பின்வரும் பொதுக்குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த பொதுக் குறிக்கோள்களிலான அசோக்க செல்லஹேவா புலமைப் பரிசு மன்றத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(அ) இர/எஹலியகொட மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாட சாலையில்) தற்போது கல்விபயிலும் மாணவர்களிடையே நிறு வனத்தின் மூலம் தீர்மானிக்கப்படும் நியதிகளினடிப்படையில், தகைமை பெறும் மாணவர்களின் கல்வி, சமூக, கலாச்சார, ஆன்மீக, விளையாட்டு, கலை, செயற்பாடுகளின் வளர்ச்சிக்காக, பொருளாதாரத்தினால் உதவுதலும், புலமைப் பரிசில் வழங்குதலுமாகும்;

(ஆ) இர/ எஹலியகொட மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலையில்) தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி, சமூக, கலாச்சார, ஆன்மீக, விளையாட்டு, கலை, செயற்பாடு களின் வளர்ச்சிக்காக, பயன்படும் செயல்திட்டங்கள் அல்லது செயற்பாடுகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தல்;

(இ) இர/எஹலியகொட மத்திய மகா வித்தியாலயத்தினதும் (தேசிய பாடசாலை) அதன் அயலில் நிறுவனத்தின் மூலம் சிபாரிசு செய் யப்படும் குறிப்பிட்ட பாடசாலைகளிலும், நாட்டில் எப்பிரதேசத் தின் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள் தொடர் பாகவும் மேலே குறிப்பிட்ட (அ), (ஆ) பரிமானங்களின்படி கூறப் பட்ட செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தல்;

என்பவையாகும்.

ஜானக வக்கும்புர.
பாராளுமன்ற உறுப்பினர்,
இரத்தினபுரி மாவட்டம்.

3-291

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.